www.Padasalai.Net

தமிழ் நாடு, ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி,
மாநிலத் திட்ட இயக்குநரின் செயல்முறைகள்
நிறப்பிப்பவர் திருமதி. மா. ஆர்த்தி, இ.ஆ.ப
ந.க.எண்:1292/ஆ2/நா.மு - 12/ஒபக/2024, நாள்: 12.07.2024

பொருள்: ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி நான் முதல்வன் திட்டம் - 2024 - 2025 கல்வியாண்டு - அரசு மேல்நிலைப் பள்ளிகளில் பயிலும் 11 மற்றும் 12 ஆம் வகுப்பு மாணவர்களுக்கான உயர்கல்வி வழிகாட்டி இரண்டாம் கட்டமாக மதிப்பீடு (Baseline Assessment) நடைபெறுதல் மற்றும் நெறிமுறைகள் வழங்குதல் - சார்ந்து

.......

நான் முதல்வன் திட்டத்தின் கீழ் அரசு மேல்நிலைப் பள்ளிகளில் 11 மற்றும் 12 ஆம் வகுப்புகளில் பயிலும் மாணவர்களுக்கான உயர்கல்வி வழிகாட்டி மதிப்பீடு (Baseline Assessment) கடந்த ஜூன் மாதம் 19.06.2024 மற்றும் 20.06.2024 ஆம் தேதி 12 ஆம் வகுப்பு மாணவர்களுக்கும் மற்றும் ஜூன் 18.06.2024 & 19.06.2024 ஆகிய தேதிகளில் 11 ஆம் வகுப்பு மாணவர்களுக்கும் முதற்கட்டமாக உயர்கல்வி வழிகாட்டி மதிப்பீட்டு தேர்வு நடைபெற்றது. அதன் தொடர்ச்சியாக, பல்வேறு காரணங்களால் முதற்கட்ட தேர்வினை நிறைவு செய்யாத மாணவர்களுக்கு மறு வாய்பாக (Baseline Assessment) இரண்டாம் கட்டமாக ( Phase - II Assessment) ஜூலை 23.07.2024, 24.07.2024 மற்றும் 25.07.2024 ஆகிய தேதிகளில் காலை 10.00 am முதல் மாலை 4.00 pm மணி வரை நடத்த திட்டமிடப்பட்டுள்ளது. உயர்கல்வி வழிகாட்டி மதிப்பீடு தேர்வினை நிறைவு செய்த மாணவர்களின் விவரங்கள் EMIS இணையதளத்தில் சென்று பதிவிறக்கம் செய்யலாம். எனவே, அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்களும் அரசு மேல்நிலைப் பள்ளித் தலைமையாசிரியர்கள் மற்றும் உயர்கல்வி வழிகாட்டி ஆசிரியர்களுக்கு உரிய வழிகாட்டுதல்கள் வழங்கி , அனைத்து மாணவர்களும் மதிப்பீடு நிறைவு செய்வதனை உறுதி செய்திடுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

**<u>தலைமை ஆசிரியர் மற்றும் உயர்கல்வி பயிற்சி பெற்ற ஆசிரியரின் பொறுப்புகள்:</u>**

- பள்ளிகளில் மதிப்பீடு தடையின்றி செயல்படுத்தப்படுவதை உறுதிசெய்ய பின்வரும் தகவல்கள் அனைத்து அரசு மேல்நிலைப் பள்ளிகளின் தலைமை ஆசிரியர்கள் மேற்கொள்ளவேண்டும்.
- http://locsrv.in:8080 என்ற இணைய தளத்தில் மதிப்பீட்டுக் கருவி தெரிகிறதா என்பதை அனைத்துப் பள்ளிகளும் சரிபார்க்க வேண்டும்.
- EMIS இல் அனைத்து மாணவர்களும் சரியாகப் பதிவு செய்யப்பட்டிருப்பதை உறுதிசெய்ய வேண்டும்.

www.Padasalai.Net

- அனைத்து மாணவர்களின் விவரங்களும் சரியாகப் பதிவு செய்யப்பட்டவுடன், முன்பு செய்ததைப் போல HM/School உள்நுழைவைப் (credentials) பயன்படுத்தி நிர்வகி பக்கத்திலிருந்து நற்சான்றிதழ்களைப் புதுப்பிக்குமாறு பள்ளிகளுக்குத் தெரிவிக்கவும். (*Once all the students are enrolled correctly, kindly inform the schools to update the credentials from the manage page using HM/School login as done earlier)*

மாநில திட்ட இயக்குநருக்காக

பெறுநர்

அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்கள்

நகல்

1. செயலர், ஆதி திராவிடர் நலப்பள்ளிகள்

2. செயலர், பழங்குடியினர் நலப்பள்ளிகள்

3. செயலர், வனத்துறை பள்ளிகள்

4. இணை இயக்குநர், கள்ளர் பள்ளிகள்

5. ஆணையர், தமிழ்நாடு மாற்றுத் திறனாளிகள் நல ஆணையரகம்

6. அனைத்து அரசு உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளித் தலைமை ஆசிரியர்கள் (முதன்மை கல்வி அலுவலர் வழியாக)